1987 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பள்ளி 1986-87 ஆம் ஆண்டிலிருந்து மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியைப் போடுகிறபோது, இந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கேள்வியைப் போட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, பள்ளி துவங்கி, பெரிய விழாவும் நடந்துவிட்டது. அது தவிர, ரூ. 1.6 லட்சம் பணம் கொடுத்து, புதிய கட்டிடம் கட்டப்பட்டு இருக்கிறது. நன்கொடையாளர்கள் இரண்டு பேர்கள் 60 ஆயிரம் ரூபாய்ச் செலவில் இரண்டு புதிய கட்டிடங்களைக் கட்டித் தந்திருக்கிறார்கள். அது அமைச்சருடைய வருகைக்காக காத்துக்கொண்டு இருக்கிறது. அங்கே இன்ப்ராஸ்ட்ரக்சர் பெசிலிட்டீஸ் இருக்கிற காரணத்தால், வருகின்ற ஆண்டில், ஆசிரியர்கள் பயிற்சி வகுப்பைத் துவக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைக் குறித்து அரசு ஆயும்.

இரண்டாவது வகுப்பு மற்றும் உதவி நீதிபதிகளுக்கு ஊர்திகள் வழங்கல்

523—(*வினா எண். 9566) **திரு. கோ. பெருமாள் பிள்ளை:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரண்டாவது வகுப்பு நீதிபதிகள் மற்றும் உதவி நீதிபதிகளுக்கு ஊர்திகள் அல்லது ஸ்கூட்டர்கள் வழங்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.